# மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் காட்டும் கலிங்கமகோன்

ச. சிவகணேசன்

வரலாற்றுத்துறை கிழக்குப் பல்கலைக்கழகம்

shivahaneshan@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

வெருகல் முதல் குமணை வரையுள்ள நிலப்பரப்பு தமிழ் மொழி வழக்கிலும் இங்கு வழங்குகின்ற மொழி வழக்கிலும்'மட்டக்களப்பு தேசம்' எனப்படுகின்றது. தற்போதைய கிழக்கு மாகாணம் என்ற வழக்கு ஆங்கிலேயர் ஆட்சிக்கால நிர்வாகப் பிரிப்பின் வளர்ச்சி நிலையாகும். இங்கு தமிழர்களும் முஸ்லிம்களும் வாழ்ந்து வருகின்றனர். மட்டக்களப்பு தேசத்திற்கு தொன்மையும் தொடர்ச்சியும் கொண்ட வரலாறு உண்டு. இதனை எவரும் மறுக்க முடியாது. ஆனால் ஐரோப்பியர் ஆட்சிக்கு முன்னரான வரலாறு இலக்கியங்கள் மரபுகள் வாய்மொழிச் செய்திகள் என்பனவற்றில் புதைந்து கிடக்கின்றது.அறிவியல் ரீதியாக தொல்லியல் ஆதாரங்களைப் பயன்படுத்தி புலமைசார் நெறியின் கீழ் மட்டக்களப்பு வரலாறு இதுவரை ஆராயப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. பொலனறுவை நகரைக்கைப் பற்றி அதிகாரம் செலுத்தி இருந்த (1215 - 1253) கலிங்கமகோன் என்பவன் மட்டக்களப்பு தேசத்தோடு ஏற்படுத்தியிருந்த அரசியல் கலாசாரத் தொடர்புகளை ஆராய்வதன் ஊடாக புதிய தகவல்களை வெளிக்கொணர முடியும். இவன் கலிங்கதேசத்தை சேர்ந்தவனாகையால் தன் தாய்நாட்டையும் பெயருடன் சேர்த்து 'கலிங்கமகோன்' என அழைக்கப்படுகின்றான். மகோன் பொலனறுவையைக்கைப்பற்றியபின் இலங்கை அரசியல் வரலாற்றுப்போக்கில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டன.அதாவது இலங்கையின் தலைநகர் தென் மேற்குதிசை நோக்கி கொண்டு செல்லப்பட்டது. கலிங்கமகோன் பொலனறுவை நகரை மையப்படுத்தி ஆட்சி செய்தகாலப்பகுதியில் மட்டக்களப்பு தேசத்துடன் நெருக்கமான அரசியல் கலாசாரத் தொடர்பினை ஏற்படுத்தி இருந்தான்.அவை தொடர்பிலான தடயங்கள் மட்டக்களப்பு தேசத்தில்காணப்படுகின்றன. கலிங்க மகோன் ஏற்படுத்திய தொடர்புகளினால் மட்டக்களப்பு தேசத்துக்கென தனித்துவமானதேச வழமைகள் வழக்காறுகள் தோற்றம் பெற்றுக்கொண்டன. கலிங்கமாகோனைப் பற்றி வேறு எந்த நூல்களிலும் குறிப்பிடப்படாத பல தகவல்கள் மட்டக்களப்புபூர்வ சரித்திரக் குறிப்புக்களில் காட்டப்பட்டுள்ளன. இந்தவகையில் மட்டக்களப்பு தேசத்துடன் மகோன் ஏற்படுத்தயிருந்த தொடர்புகளின் வகிபாகத்தை சாசனங்கள்மற்றும் தொல்லியல் எச்சங்கள் ஆலயத் தொழும்புகள் களஆய்வுகள் இலக்கியங்கள் மரபுக்கதைகள் போன்றவற்றில் வருகின்ற வரலாற்றுச் செய்திகளோடு ஒப்பிட்டுஆராய்தல் ஆய்வின் அணுகுமுறையாகும்

**சிறப்புச்சொற்கள்** - மட்டக்களப்பு தேசம் தொழும்புகள் சாசனங்கள் தேச வழமை.